# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**U.G.** DEGREE EXAMINATION –**LANGUAGES**

**FIRST** SEMESTER – **NOVEMBER 2018**

**16/17/18UTL1RL02– GENERAL TAMIL - I**

Date: 26-10-2018 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00-12:00

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்ததால் தமிழ்நாடு பெற்ற பயன் என்ன?
02. உருவமில் இறைவன் ஒருவன் என்றும், நேசி பகைவரை என்றும் கூறியவர்கள் யாவர்?
03. நாட்டின் பெருநெருப்பு எது?
04. மாடா உழைச்சவன் வீட்டினில் பசி வந்திடக் காரணம் என்ன?
05. அன்பு ஒரு விசித்திரமான வியாபாரம் ஏன்?
06. பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு முத்தமிட்டுப் பூமி என்ன கூறியது?
07. சிகரெட் பெட்டிகள் எதைப் போன்று உள்ளன?
08. தற்காலக் கவிஞர்களுள் எவரேனும் இருவர் பெயரை எழுதுக.
09. வல்லின ஒற்று மிகும், மிகா இடங்களைக் குறிப்பிடுக.
    அ) மலர் + கூடை = ஆ) பல + குதிரை = இ) தண்ணீர் + தொட்டி = ஈ) பள + பள =
10. ஒரு கப் டீ கொடு, அவருக்கே உரிய ஸ்டைலில் கூறினார் - இத்தொடர்களில் உள்ள ஆங்கிலக் கலப்பு நடையைத் தவிர்த்து எழுதுக.

**பகுதி - ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. அரசியல் வகையின் அயல்மொழிப் பெயர்களைப் பற்றி கவிஞர் பாரதிதாசன் தரும் விளக்கங்களை எழுதுக.
12. காடுகளின் பல்வேறு பயன்கள், அழகுகள் குறித்து உவமைக் கவிஞர் சுரதா பாடியுள்ளதை விளக்குக.
13. திருநங்கையரின் வேதனைகளைக் கவிஞர் நா. காமராசன் காகிதப் பூக்கள் என்ற கவிதையின் வழி எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?
14. காகித உறவு சிறுகதையின் மூலம் இன்றைய நடப்பியல் எவ்வாறு புலப்படுத்தப்பட்டுள்ளது? விளக்குக.
15. கி. இராஜநாராயணனின் ‘கதவு’ சிறுகதை உணர்த்தும் செய்திகளை ஆய்க.
16. திறமைக்கு ஏது தோல்வி என்ற கட்டுரையில் சுகி. சிவம் கூறியுள்ள கருத்துகளுள் நும்மைக் கவர்ந்தவற்றை எழுதுக.
17. மேனாட்டுத் தமிழ் அறிஞர்கள் எவரேனும் மூவரின் தமிழ்ப்பணிகளைக் குறிப்பிட்டு எழுதுக.

**பகுதி - இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. தமிழின் பல்வேறு சிறப்புகளைப் பாரதியாரின் பாடல்வழி விளக்குக.

    **( அல்லது )**

    தீபங்கள் தீ வைக்கலாமா? என்ற தலைப்பில் கவிஞர் மு. மேத்தா கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

19. ஔவையாரின் தனிப்பாடல்கள் உணர்த்தும் நீதிகளை விளக்குக.

    **( அல்லது )**

    வெற்றி பெறுபவர்களும் தோல்வி அடைபவர்களும் என்ற தலைப்பில் ஷிவ்கெரா கூறும் அறிவுரைகளைத் தொகுத்தெழுதுக.

20. ஒருநாள் கழிந்தது சிறுகதையின் மூலம் புதுமைப்பித்தன் உணர்த்தும் வாழ்வியல் நிலையை எழுதுக.

    **( அல்லது )**

    பிள்ளைத்தமிழ், பரணி, உலா, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களின் வரலாற்றினை விளக்குக.

---